# தேவனுடைய மாதிரியைப் பின்பற்றுதல் (1 தீமோத்தேயு 4)

*"இவைகளை நீ சகோதரருக்குப் போதித்துவந்தால், விசுவாசத்திற்குரிய வார்த்தைகளிலும் நீ அநுசரித்த நற்போதகத்திலும் தேறினவனாகி, இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல ஊழியக்காரனாயிருப்பாய்" (1 தீமோ. 4:6).*

அதிகாரம் 3ல் கலந்துரையாடப்பட்ட தலைவர்களைக் கொண்டிருப்பதன் அவசியத்தை அதிகாரம் 4 முன்னிறுத்துகின்றது. பரிசுத்தவான்களை ஒன்றுகூட்டிப் பற்றியிருப்பதற்குத் தலைவர்கள் (எபி. 13:7ஐக் காணவும்) இல்லாத நிலையில், பிசாசின் சீஷர்கள் சபையில் பிரவேசித்து விலகிச் செல்லுதலை ஏவுவார்கள் (யோவா. 8:43-45; 2 கொரி. 11:13-15; ரோமர் 16:17, 18ஐக் கவனிக்கவும்). நான்காம் அதிகாரமானது தேவனுடைய வசனத்திலிருந்து திருப்பி இயக்கும் கள்ள மற்றும் தவறுகின்ற தலைவர்களில் இருந்து (4:1-5), இழந்து போன ஆத்துமாக்களைத் தேவனுடைய வசனத்தினால் உயர்த்தி, தங்களையும் தங்களது போதனையைக் கேட்பவர்களையும் மீட்டுக் கொள்கின்ற சக்தி மிக்க சுவிசேஷ ஊழியர்களைப் பற்றி எடுத்துரைப்பதற்கு வெகுவாய்த் திரும்புகின்றது (4:12ஆ-16). "ஆரோக்கியமான உபதேசத்தில்" (4:6-8) இருந்து ஊட்டமளித்தல் மற்றும் அப்போஸ்தல மாதிரியின் மூலம் கீழ்ப்படிதலுடன் செயல்விளக்கப்படுத்துதல் ஆகியவற்றின் காரணமாக அந்த மாறுதல் சாத்தியமாக்கப்படுகிறது (4:9-12அ). இவ்விதமாக, இந்த அதிகாரம் தேவனுடைய வசனத்தின் மாபெரும் தேவையை விரித்துரைக்கிறது மற்றும் அது எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் காண்பிக்கிறது.

## பாடம் 10: விசுவாசத்திலிருந்து விலகும் திட்டம் (4:1-5)

### அவர்களுடைய ஓட்டத்தின் நிச்சயம் (வ. 1அ)

நான்காம் அதிகாரத்தின் முதல் வார்த்தையானது - "ஆகிலும்" என்பது -

நன்னடைத்தையுள்ள நல்ல மனிதர்களில் இருந்து (அதிகாரம் 3ல்) ''பிசாசுகளின் உபதேசங்களைக்'' கொண்டுள்ள தீய மனிதர்களுக்கு பவுலினால் தலைப்பு மாற்றம் செய்யப்படுவதை அடையாளமாய்க் குறிப்பிடுகிறது (4:1).

இதை ஆவியானவர் "வெளிப்படையாய்க்" கூறியுள்ளதால் நாம் இந்த எச்சரிக்கையைக் கவனமாய் கேட்க வேண்டும். இது நிச்சயமாகவே இப்படித்தான் நடக்கும், மற்றும் இதை நாம் நம்பி எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். சத்தியத்தைக் கூறுவதாக உரிமைகோரும் மனிதர்கள் விலகிச் சென்று பொய்யை அறிவிப்பது எவ்வளவு கவலைக்குரியதாய் உள்ளது! எளிமையான ஆத்துமாக்கள் பரிசுத்த ஆவியானவரின் எச்சரிக்கையைக் கவனியாமல் பிசாசின் வழிகளை அரவணைத்துக் கொள்ளுதல் என்பது இரு மடங்கு கவலைக்குரியதாக உள்ளது (1 யோவா. 4:1; மத். 24:23-26; அப். 17:11).

இது ''பிற்காலங்களில்'' நடக்கும் என்று பவுல் கூறினார். அவர் தீமோத்தேயுவை, "நீ இதை இப்பொழுது காணாதிருக்கலாம், ஆனால் இதைப் பற்றிக் கவனித்துக் கொண்டிரு - ஏனென்றால் இது நடைபெறும்!" என்று எச்சரித்தார். "சிலர் விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்"[1] என்று ஆவியானவரும் உறுதிப்படுத்தினார். "விலகிப் போவார்கள்"[2] என்று மொழிபெயர்க்கப்பட்ட சொற்றொடரின் விளக்கமானது இது நடக்கக் கூடிய மாறுபட்ட பல வழிகளை உள்ளடக்குகிறது. உறுப்பினர்கள் (வசனத்தின்) மறு பக்கம் நிற்கத் தொடங்கி, பின்வாங்கி, வேறு எங்காவது செல்லும் பொழுது அல்லது அலைபாயத் தொடங்கும் விசுவாசத்தைக் கொண்டிருக்கும் பொழுது, கவனமாயிருங்கள் - ஏனெனில் ''விலகிப் போகுதல்" தொடங்கியுள்ளது!

## அந்த ஓட்டத்திற்கான காரணம்
## (வ. 1ஆ, 2)

உறுப்பினர்கள், "வஞ்சிக்கிற ஆவிகளையும்" (தந்திரமான சிருஷ்டிகள்) "பிசாசுகளின் உபதேசங்களையும்" (மோசம் போக்கும் உடன்படிக்கைகள்) கவனிக்கத் தொடங்கும் பொழுது கவனமாயிருங்கள். வஞ்சித்தலைச்[3] செய்கின்றவர்களின் இயல்பைக் கவனியுங்கள். அவர்கள் "மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தை''(4:1)ப் பயன்படுத்தி மக்களை மயக்குகின்றனர். இந்த மக்கள் எவ்வளவு அடிக்கடி ஒரு சபையிலிருந்து இன்னொரு சபைக்கு மாறிச் சென்று, பலரைக் கலவரப்படுத்தி சில வேளைகளில் சபையைப் பிளவுப் படுத்துகின்றனர்!

அவர்கள் "பிசாசுகளின் உபதேசங்களை" வளரச் செய்தனர் என்பதே அவர்கள் அவ்வளவு செல்வாக்குடையவர்களாய் இருந்ததற்குக் காரணமாகின்றது. "பிசாசுகள்"[4] என்று மொழிபெயர்க்கப்பட்ட சொற்றொடரானது "நிபுணத்துவம்" என்றும் அர்த்தப்பட முடியும் என்ற உண்மையானது, இந்த உபதேசங்கள், இவ்வளவாய் வஞ்சிக்கின்றவைகளாக, அறியாமையும் ஐயமற்ற நிலையும் கொண்டு, போதகர்கள் சத்தியத்தை மட்டுமே

பேசுவார்கள் என்று எதிர்பார்க்கிற ஆத்துமாக்களை வலையில் வீழ்த்துவது ஏன் என்பதை விளக்குகின்றது (1 பேது. 2:1-3; ரோமர் 16:17, 18). நமது நாட்களில், "சாத்தான் என்னை இவ்வாறு செய்யத் தூண்டி விட்டான்" என்று இலேசாய்க் கூறக் கூடிய சொல் விளக்கமானது சிலர் ஒப்புக் கொள்ள விரும்புகின்ற சத்தியத்திற்கு நெருக்கமானதாயிருக்கலாம். அது உண்மை யாக இருந்த போதிலும் கூட, யோவான் 8:44ல் கிறிஸ்துவின் உற்று நோக்கலை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்: "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின் படி செய்ய மனதாயிருக்கிறீர்கள் ... அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும் போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்." சாத்தானுடைய வஞ்சிக்கும் செல்வாக்கிற்கு நாம் சரணடையும் பொழுது, அவ்வாறு செய்தல் என்பது இன்னமும் நமது மனவிருப்பமாக அல்லது தீர்மானமாகவே இருக்கிறது.

## மோசடி குறிப்பிடப்படுகிறது
## (வ. 3-5)

விலகிப் போகிறவர்கள், மக்களைத் திருமணம் செய்யத் தடை செய்வார்கள் (எபி. 13:4; 1 கொரி. 9:5; எபே. 5:23-31 ஆகியவற்றைக் காணவும்) மற்றும் (சிலவகை) உணவுகளை[5] உண்பதை விலக்கும்படி கட்டளையிடுவார்கள், இவர்களை எதிர்க்கும்படி பவுல் கிறிஸ்தவர்களைத் தயார்ப்படுத்தினார். இந்நாட்களில் பல்வேறு சமூகம் மற்றும் மதம் சார்ந்த வட்டாரங்களில் இவ்விரு நடைமுறைகளும் தொடர்கின்றன என்பது வியப்புக்குரியதாய் உள்ளது - ஆனால் இந்த தீர்க்கதரிசனத்தின் வெளிச் சத்தில் காணும் பொழுது, இது திகைப்புக்குரியதாயிருப்பதில்லை. இந்தத் தவறுகளின் தொடக்க காலத் தோற்றம் குறித்து பார்க்ளே அவர்கள் பின்வருமாறு கலந்துரையாடினார்:

> இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் எழுதிய இரேனியுஸ் என்பவர், சாட்டார்னினுஸ்ஸின் குறிப்பிட்ட சில பின்பற்றாளர்கள் எவ்வித மாய், "திருமணமும் சந்ததியும் சாத்தானிடமிருந்து வருகின்றன என்று அறிவித்தனர். அது போலவே பலரும் விலங்கு இறைச்சி உணவைத் தவிர்த்தனர், இவ்வகையான போலி நடிப்பான இச்சையடக்கத்தினால் திரளான கூட்டத்தை இழுத்துக் கொண்டார்" என்பது பற்றிக் கூறுகின்றார் (Irenaeus, *Against Heresies*, I, 24, 2). இவ்வகையான விஷயமானது நான்காம் நூற்றாண்டின் சமய குருக்கள் மற்றும் துறவிகளில் தலையிலிருந்து (சிந்தையிலிருந்து) உண்டாகி வந்தது. அவர்கள் புறம்பே சென்று, எகிப்தியப் பாலைவனத்தில் மனிதர்களிட மிருந்து முற்றிலும் துண்டாடப்பட்ட நிலையில் வாழ்ந்தனர். அவர்கள் மாம்சத்தை இழிவுபடுத்தும் வகையில் தங்கள் வாழ்வைச் செல விட்டனர். சமைக்கப்பட்ட உணவை ஒருக்காலும் சாப்பிட்டிராதவர் தமது "மாம்சமற்ற தன்மைக்காக" புகழ்மிக்கவராயிருந்தார்.[6]

அப்போஸ்தலிக்க சட்டங்கள் (#51) என்பதில் ஆதாரப்படுத்தப்

பட்டுள்ளதன்படியாக ஆதி கிறிஸ்தவர்கள் சிலரால் இந்த போதனைகளுக் கெதிரான பலத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன:

> எந்தக் கண்காணியாவது, குருவாவது அல்லது உதவிக்காரராவது, அல்லது குருத்துவ அட்டவணையில் உள்ள எவரொருவராவது இச்சையடக்க மெய்ஞான வழி (அதாவது ஒழுக்கத்தினிமித்தமாக) என்ற அடிப்படையிலின்றி, திருமணம், மாம்சம் மற்றும் மது ஆகியவற்றை தீயவை என்று அருவருப்புக் கொள்வதால் அவற்றை விலக்கி வைத்து, எல்லாம் நல்லவைகளே மற்றும் தேவனே ஆணையும் பெண்ணையும் படைத்தார் என்பதை மறந்து, தேவனுடைய ஊழியத்துவத்தைத் தூஷணப்படுத்தி, இழிவு செய்தால், ஒன்று அவர் தவறுகளை அகற்றிச் சீர்ப்படுத்திக் கொள்ளட்டும் அல்லது அவர் சபையிலிருந்து அகற்றப்பட்டு தள்ளி வைக்கப்பட வேண்டும்.[7]

இந்த எச்சரிப்பானது இவ்வகையான விலக்கத்தின் உண்மைத் தவறைக் குறிப்பிட்டது. தேவன் மனிதனை மாம்சமுள்ளவனாக உண்டாக்கி, அவர் உண்டாக்கினது நல்லதென்று கண்டு அதை அறிவித்தார். மனித இனமானது தேவ சாயலாக உண்டாக்கப்பட்டது (ஆதி. 1:26, 27). தேவன் திருமணத்தை ஏற்படுத்தி அது நல்லது என்று அறிவித்தார் (ஆதி. 2:18-24). தேவன் இணைத்ததை மதியீனமான இச்சையடக்கத்தினாலோ அல்லது பிசாசினால் ஏவப்பட்ட உபதேசக் கட்டளைகளினாலோ, மனிதன் பிரிக்காதிருக் கட்டும். மேலும் தொடக்கத்தில் தேவன், “நடமாடுகிற ஜீவ ஜந்துக்கள் யாவும் உங்களுக்கு ஆகாரமாயிருப்பதாக” (ஆதி. 9:3) என்று அறிவித் திருந்தார். நல்லதென்றும் சுத்தமானதென்றும் தேவன் அறிவித்துள்ளவற்றை தீட்டானதென்று அசுத்தமானதென்றும் அறிவிப்பதினால் நாம் புறக்கணிக் கவோ அல்லது தடை செய்யவோ கூடாது (அப். 10:12-16, 28). ஆகையால், நாம் தேவனுக்கா அல்லது மனிதனுக்கா, யாருக்குக் கீழ்ப்படிவோம் என்பதே கேள்வியாய் உள்ளது. இப்படிப்பட்ட எல்லா விஷயங்களிலும் ரோமர் 3:4 வசனம் இசையச் செய்ய வேண்டும்! “... தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்லுவோமாக, ...”

மனிதனுடைய மோசடியுடன் தேவனுடைய தெளிவித்தலானது எப்பொழுதுமே வருகிறது. தேவன் படைத்த யாவும் நன்றாய் உள்ளது (ஆதி. 1:24, 25) மற்றும் சத்தியத்தை விசுவாசித்து அறிந்துள்ள எவரொருவராலும் அது ஸ்தோத்திரத்தோடே ஏறெடுத்துக்கொள்ள வேண்டும் என்று பவுல் உறுதிப்படுத்தினார். விலங்கிறைச்சி உணவானது தேவனுடைய வசனத் தினாலும் (அவரது அறிவித்தல்களினாலும்) மற்றும் ஜெபத்தினாலும் (மனித னின் நிலைப்பாட்டினாலும்) பரிசுத்தமாக்க(பிரிக்கப்)படுகிறது. மீண்டும் ஒருமுறை மனிதனின் கலந்து வைக்கப்பட்ட சிந்தனையும் இடறலுண் டாக்கும் போதனைகளும், எஜமானருடைய செய்தியை நாம் கவனித்துக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தை நிரூபிக்கின்றன.

## *பாடம் 11: பிரசங்கியாரின் தயாரிப்பு (4:6-8)*

*பிசாசின் வஞ்சனையைத் தவிர்ப்பதற்குத் தேவனுடைய உதவி நமக்குத் தேவைப்படுவதால், தேவனுடைய ஊழியர் தமது பணியை நிறைவேற்ற வேண்டும். இவ்விதமாகப் பவுல் தீமோத்தேயுவிடம், "இவைகளை நீ சகோதரருக்குப் போதி [சுட்டிக் காண்பி]" (4:6) என்று வேண்டுகோள் விடுத்தார். இது ஒரு தெரிவாக இன்றி கட்டளையாக இருந்தது. கிரேக்கச் சொற்றொடரான hupotithemenos ("இடுதல் அல்லது ஆதரித்தல்"[8] என்று அர்த்தப்படுகின்ற hupotithemi என்ற மூல வார்த்தையிலிருந்து வந்தது) என்பது ஒரு நிகழ்கால இடை எச்ச வினையாக உள்ளது; எனவே இது "தீமோத்தேயுவே, நீ சகோதரரைப் போதித்தல் மற்றும் ஆதரித்தல் என்ற இந்த ஊழியத்தைச் சுயமாய்த் தொடங்குகின்றவராகவும் தொடர்ந்து செய்கின்றவராகவும் இருங்கள்" என்று கூறுகின்ற பவுலின் வழிமுறையாக இருந்தது.*

*கிறிஸ்தவர்கள் சத்தியத்தை ஆதாரமாய்க் கொண்டிருக்கும்படியாக அவர்களின் சிந்தைகளில் தேவனுடைய சத்தியங்களை நாட்டி வைக்கும்படி சுவிசேஷகர்கள் அழைக்கப்படுகின்றனர் (எபே. 6:14ஐக் காணவும்). இந்தப் பணியானது, "இவ்விஷயங்கள்" சகோதரர்களின் சிந்தைகளில் இவ்வளவாய் பதியப்படுவதற்காக ஒருவர் தம் உயிரையே கையளிக்குமளவு - ஒருவர் தம் கழுத்தை வெட்டக் கொடுக்குமளவு செல்கின்றதாய் உள்ளது. "சகோதரர் கள்" (Gk.: adelphos) என்றால் "ஒரே கருப்பையிலிருந்து வந்தவர்கள்"[9] என்று ரஸல் பிராட்லி ஜோன்ஸ் அவர்கள் சுட்டிக்காண்பித்தார். கள்ள போதகர் களுக்கு நேரெதிரான வகையில், உண்மையான சுவிசேஷகர், தேவனுடைய வீட்டில் (1 தீமோ. 3:15) பிறந்துள்ளவர்களாகிய தேவனுடைய குடும்பத்தின் உறுப்பினர்களுடைய சிந்தைகளில் அன்புடன் சத்தியத்தை ஆழமாக நாட்டி வைக்கிறார்.*

*ஒருவர் இவ்வழி முறையில் ஊழியம் செய்கின்ற பொழுது, அவர் உண்மையாகவே கிறிஸ்து இயேசுவுக்கென்று "நல்ல ஊழியக்காரராக" (Gk.: diakonos; 3:8-13க்கான குறிப்புகளைக் காணவும்) ஆவார்.*

> *"உன்னதமான ஊழியர்" என்பவர் தமது பணிக்கு, தமது மக்களுக்கு, மற்றும் எல்லாவற்றுக்கும் மேலாக தமது தேவனுக்கு அன்புடன் கூடிய அர்ப்பணிப்பில், சத்தியத்திலிருந்து விலகிச் செல்லுதலுக்கெதிராக எச்சரிக்கின்றார், மற்றும் தவறுகளைச் சீர்ப்படுத்தக் கையாளுதல் எவ்வாறு என்றும் காண்பிக்கின்றார். இப்படிப்பட்ட மனிதர் உண்மையிலேயே கிறிஸ்துவைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார் (மற்றும் கிறிஸ்துவுக்கு உரியவராகின்றார்).[10]*

*இவ்விடத்தில் போதிக்கும் ஊழியக்காரர் ஒருவர் உள்ளார்!*

### ஒரு மாதிரியும் ஒரு பிரச்சனையும் *(வ. 6, 7)*

*ஒருவர் "நல்லதொரு ஊழியக்காரராக" இருப்பதற்கு, விசுவாசத்தின்*

வசனங்களால் மற்றும் ஆரோக்கியமான உபதேசத்தினால் (ஒருவர் அறிவிக்கிறது என்ன என்பது) ஊட்டப்படுத்தப்பட (ஒருவர் எவ்வாறு மேம்படுகிறார் என்பது) வேண்டும். இந்தப் பகுதிகளில் "ஊட்டப்படுத்தப்படுதல்"[11] என்பது ''கல்வியளித்து, சிந்தையை வடிவமைத்தல்'' என்று அர்த்தப்படுகிறது. சாதாரணமான வாசிப்பினால் ஒருவரின் சிந்தை வடிவமைக்கப்படுவதில்லை. இதற்கு அக்கறை, நம்பிக்கையுடன் கட்டமைக்கும் முயற்சி ஆகியவற்றுடன் கூடிய ஊக்கமான படிப்பு தேவைப்படுகின்றது.

தீமோத்தேயு அந்த மாதிரியைப் பின்பற்றியிருந்ததாகப் பவுல் உரைத்தார். இவ்விடத்தில் பவுல் பயன்படுத்திய முற்று வினையானது, தீமோத்தேயு இந்த விஷயங்களில் ஒரு பக்குவத்தை (முழுமைத் தன்மையை) அடைந்திருந்தார் என்று சுட்டிக் காண்பிக்கிறது. அவர் தமது ஓட்டத்தை மாற்றத் தேவையில்லை, ஆனால் அவர் செய்து கொண்டிருந்ததைத் தொடர்ந்து செய்யும்படிக் காத்துக் கொள்ளுதல் அவசியமாயிருந்தது. என்ன செய்யப்பட்டுக் கொண்டிருந்தது என்பது "அநுசரித்த"[12] என்ற வார்த்தையில் தெளிவாகின்றது. தீமோத்தேயு சென்ற இடங்கள் எல்லாம் ஆரோக்கியமான உபதேசமும் விசுவாசத்தின் வசனங்களும் இருந்தன/உடன் சென்றன என்ற கருத்து எவ்வளவு அழகாய் உள்ளது! அவர் ஊட்டப்படுத்தப்பட்டிருந்தார் என்ற கருத்தானது அந்த உபதேசத்திற்குத் தீமோத்தேயு உடன்பட்டு, அதைப் பின்பற்றுகையில் தீமோத்தேயுவின் சிந்தையானது வடிவமைக்கப்பட்டு, தகவல் அளிக்கப்பட்டது என்பதை ஆலோசனையாய்த் தெரிவிக்கிறது. இது போன்றே சுவிசேஷகர் ஒவ்வொருவரும் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது (2 தீமோ. 2:15ஐக் காணவும்).

தேவனுக்காகப் பேசுபவரை பாராட்டப்படக் கூடிய இவ்விதமான மாதிரியிலிருந்து வழி விலக்கிக் கொண்டு செல்வதைக் காட்டிலும் சிறந்த எதையும் பிசாசானவன் விரும்ப மாட்டான். தீமோத்தேயுக்கு, "சீர் கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுக் கதைகளுக்கு விலகி, தேவபக்திக் கேதுவான முயற்சி பண்ணு" என்று கூறியதில் பவுல், இது (விசுவாச விலக்கம்) நடைபெறக் கூடிய நுட்பமான இரு வழிகளைச் சுட்டிக் காண்பித்தார். முதலாவது அவர் தீமோத்தேயுவை, சீர் கேடானவைகளுக்கு[13] விலகும்படி எச்சரித்தார். குறிப்பிட்ட சில இடங்களும் மற்றும் நடைமுறைகளும் முழுமையற்றவைகளாகவும்/சீர் கேடானவைகளாகவும் நன்மைக்கான ஒருவரின் செல்வாக்கை அழிப்பவைகளாகவும் உள்ளன (2 கொரி. 6:17-7:1; 1 பேது. 4:1-5 ஆகியவற்றைக் காணவும்). இது சகோதரர்கள் மத்தியிலோ அல்லது உலகத்திலோ நடைபெறுகிற கெடுமதியான பேச்சு அல்லது கேள்விக்குரிய நடக்கையைக் குறிப்பிடக் கூடும் (கலா. 5:15; தீத்து 1:9-11; 1 கொரி. 10:31-33). இரண்டாவது, பவுல் அவரை (தீமோத்தேயுவை) கிழவிகளின் கட்டுக் கதைகளுக்கு[14] விலகியிருக்கும்படி எச்சரித்தார். இவைகள், ''யூதர்களின் அறிவற்ற சிறுகதைகள், தவறிழைப்பவர்கள் இவற்றினால் நியாயப்பிரமாணத்தை அழகூட்ட முயற்சித்தார்கள் ... இவைகள் பொருளற்ற பேச்சுக்கள் மற்றும், சில வேளைகளில் முதிர் வயதுள்ள பெண்கள் தங்கள் அயலகத்தாரையோ அல்லது தங்கள் பேரப்பிள்ளைகளையோ சந்தோஷப்படுத்த முயற்சிக்கும் அற்பமான மூட

நம்பிக்கைகள் என்பவைகளே தவிர வேறொன்றுமில்லை''[15] என்று ஹென்ரிக்ஸென் அவர்கள் எடுத்துரைத்தார். முதிர் வயதுள்ள பெண்களுக்கு தர வேண்டிய எல்லா மரியாதையும் கொண்டிருந்த பவுல், இளம் சுவிசேஷ கருக்கு அவர்கள் ஒரு பிரச்சனையாக இருக்கக் கூடும் என்று அறிந்திருந்தார், எனவே அவர் தீமோத்தேயுவை இவ்வாறு முன்னெச்சரித்தார்.[16]

## பிரயோஜனமான முயற்சி (வ. 8)

தீமோத்தேயு சரியான வழியில் துடிப்புடன் தன்னைக் காத்துக் கொள்ளுதலும், தம் நடவடிக்கையில் தக்க வகையிலான சமான நிலையைப் பராமரித்தலுமே (அவர்) விலகிச் செல்லும்படி வழிநடத்தப்படுதலைத் தவிர்க்கக் கூடிய வழிமுறையாய் இருந்தது. உடல் ரீதியான கட்டுப் பாட்டிற்கு மேலாக தேவபக்தியைப் பவுல் பரிந்துரைத்தார். சரீர உடற் பயிற்சி பற்றிய அவரது கூற்றின் உருவகமானது அந்நாட்களில் சாதாரண மானதாயிருந்தது. கள்ள போதகர்கள் சிலர், உடலுக்கு மிகக் கண்டிப்பான ஒழுங்கு முறையைச் செயல்படுத்தி வந்தனர் (கொலோ. 2:20-23), மற்றும் பவுல் ஆவிக்குரிய சத்தியங்களை விவரிப்பதற்கு விளையாட்டுப் போட்டியை அடிக்கடி குறிப்பிட்டார் (ரோமர் 9:16; 1 கொரி. 9:24-27; கலா. 2:2; 5:7; பிலி. 2:16; 2 தீமோ. 2:5). "முயற்சி பண்ணு''[17] என்று மொழி பெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையைப் பவுல் தொடர் செயல்பாட்டைக் குறிப்பிடும் நிகழ்கால வினையில் இட்டு, தேவபக்திக்காகச் செலவிடப்படும் இப்படிப்பட்ட வலிவார்ந்த முயற்சியானது அவருக்கு முழுமையாகப் பயன்படும் என்று உறுதியளித்தார். நமது உடலைத் தக்க வகையில் பேணும்படியும் (யாக். 4:8; 1 பேது. 2:8-16; 1 கொரி. 6:19, 20) நமது ஆத்துமா விற்கும் (யாக். 1:21-25; 1 பேது. 1:6-9), மற்றும் நமது ஆவிகளுக்கும் (1 கொரி. 2:11, 12; எபி. 4:12, 13; ரோமர் 8:2-15; 12:11; பிலி. 1:27, 28) அறைகூவல்கள் விடுத்தும் தேவன் அழைக்கிறார். ஆவிக்குரிய முயற்சியானது இந்த வாழ்வில் நமக்குப் பலன் அளிப்பதோடு மட்டுமல்லாமல், நித்தியமான வட்டாரங் களுக்குள் பிரவேசத்தை நமக்கு உறுதியளிக்கிறது.

எந்த ஒரு சுவிசேஷகரும் தேவனுடைய மக்களுக்கு முன்பாக தேவபக்திக் கேதுவாக முயற்சி செய்யும் வலிவார்ந்த மற்றும் பயனுள்ள இந்த முயற்சியை அமைக்க வேண்டும். ஏன்? ஏனென்றால் அது சரியானதாக உள்ளது, மற்றும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே அப்போஸ்தலர் கள் இப்படிப்பட்ட தர அளவை ஒன்றை நமக்காக அமைத்து வைத்துள்ளனர் (இதுவே பவுலின் அடுத்த தலைப்பாக இருந்தது).

## பாடம் 12: அப்போஸ்தலர்களின் மாதிரி (4:9-12அ)

வசனங்கள் 10 மற்றும் 11 ஆகியவை "எல்லா அங்கிகரிப்புக்கும்

பாத்திரமாயிருக்கிறது'' (வ. 9) என்பதை கவனத்துடன் தியானித்துப் பார்க்கும்படி அழைக்கும் வகையில் இந்த "உண்மைக்குத் தகுதியான கூற்றின்'' ஒவ்வொரு வார்த்தையும் இவ்விதமான பலம் நிறைந்த நியமத்தினால் செறிவூட்டப்பட்டுள்ளன (4:9).

## இந்த மனிதர்களின் இயல்பு (வ. 10)

வசனம் 10ல் உள்ள "பிரயாசம்"[18] என்ற வார்த்தையைக் கவனியுங்கள். இவ்விடத்தில் பிரசங்கியார்கள் மேற்கொள்ள வேண்டிய உயர் புகழ்ச்சிக்குரிய பாதையொன்றுள்ளது. இது, சுமைகள், உழைப்பு, வருத்தம், அறிவித்தல் மற்றும் மேம்படுதல் ஆகியவை கலந்த கலவையொன்று அடங்கியதாக, அது ஒவ்வொரு இரவும் பகலும் - சமயம் வாய்த்தாலும் வாய்க்கா விட்டாலும் நிரம்புவதாக உள்ளது (2 தீமோ. 4:2-5ஐக் காணவும்). பிரசங்கியாரே, நீங்கள் இவ்வாறு பிரயாசப்பட்டு இருக்கிறீர்களா?

"கடும் முயற்சி"[19] என்ற வார்த்தையைக் கவனியுங்கள். இவ்விடத்தில், தேவபக்திக்கென்று அமைக்கப்பட்ட தைரியமான, இலக்கு நோக்கிய நியமம் ஒன்றுள்ளது. பிரசங்கியாரே, நீங்கள் இவ்வாறு கடும் முயற்சி செய்கின்றீர்களா?

அப்போஸ்தலர்கள் நல்லவைகளே நடக்கும் என்கிற கண்ணோட்டம் கொண்டிருந்தார்கள்: "ஏனெனில் எல்லா மனுஷருக்கும் [வல்லமை நிறைந்த சுத்திகரிப்பாளர்; எபி. 7:25] விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன்மேல் [வல்லமை நிறைந்த பிரசன்னம்] நம்பிக்கை வைத்திருக்கிறோம்" (4:10).[20] இது நமது நம்பிக்கையை உயிருடன் காத்துக் கொள்ளும்படி நம்மை உற்சாகப்படுத்த வேண்டும். தேவனுடைய ஊழியர் கடினமானவைகளை எதிர்கொள்ளுவார். சிலர் இந்த இதயத்தை உடைக்கும் விஷயங்களைக் கண்ணுற்று நம்பிக்கையை இழந்து விடுகின்றனர். இருப்பினும், தேவன் மரித்திருக்கவில்லை, மற்றும் மனிதர்கள் இரட்சிக்கப்பட்டிருப்பதிலிருந்து நின்று விடவில்லை. எதிர்மறையை நாம் எதிர் கொள்ளும் பொழுது ஓய்ந்து போய் விடக் கூடாது. இயேசு முன்னுரைத்தது போலவே (மத். 24:1-3, 9; 2 தீமோ. 4:7, 8, 16-18) அப்போஸ்தலர்கள், தேவனுடைய ஊழியத்தில், துன்புற்று, மரித்தார்கள்; ஆனால் இவ்விடத்தில் அவர்களை நம்பிக்கையின் செய்தியாளர்கள் என்று பவுல் மறைமுகமாய்ச் சுட்டிக் காண்பித்தார். பள்ளத்தாக்கு ஒவ்வொன்றின் மீதும் நம்பிக்கையின் வானவில் ஒன்றை இடுவதற்கு அவர்கள் என்ன ஒரு நியம அமைப்பாளர்களாய் இருந்தார்கள்! பிரசங்கியாரே, நீங்கள் பரலோக நம்பிக்கையின் செயல்விளக்கமாக இருக்கின்றீர்களா?

## அவசியமாய் செய்ய வேண்டியவை (வ. 11, 12அ)

பவுல், தாம் கலந்துரையாடிக் கொண்டிருந்த மற்றும் அப்போஸ்தலர்கள் செய்து கொண்டிருந்த விஷயத்தைக் குறிப்பிடுதலுக்கும் போதிப்பதற்கு

மான அவசியத்தை வலியுறுத்தினார். "குறிப்பிடுதல்" (Gk.: *paraggelle*; "அவர்களின் கவனத்தைப் பெறுதல்") மற்றும் "போதித்தல்" (Gk.: *didaske*; "தேவைப்படும் ஆத்துமாக்களுக்கு உதவி அளித்தல்"; அப். 8:29-35) ஆகிய இரண்டுமே நிகழ்கால நிபந்தனைகளாய் உள்ளன; பவுல், (1) அதைச் செய்து கொண்டே இருக்கும்படியும் மற்றும் (2) அது செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார். செயல்விளைவில் அவர் தீமோத்தேயுவுக்கு, "இவ்விஷயங்களை மற்றவர்களுக்குக் கட்டளையிடுதல் மற்றும் அறிவுறுத்து தல் ஆகியவற்றிலிருந்து உன்னை விலக்கிப் போடும்படி நீ விசுவாச விலக்கத்தையோ, கள்ள போதகங்களையோ, உலகப் பிரகாரமான பொய்க் கதைகளையோ, உன் இளமையையோ [பிற்பாடு பவுல் வளரச் செய்யப் போகிற ஒரு கருத்து] அல்லது வேறு எதையுமோ அனுமதித்து விடாதே!" என்று கூறினார் (3:14, 15; 4:1-12ஐக் காணவும்).

வயதைப் பற்றிய ஒரு ஞானமுள்ள கவனிப்பைப் பவுல் மேற்கொண்ட வகையில், எந்த ஒரு இளம் ஊழியருக்கும் ஒரு உச்சகட்டமான அறைகூவலு டன் நான்காம் அதிகாரம் முடிவடைகிறது. மக்கள் ஞானத்தை வயதுடன் அடிக்கடி தொடர்புபடுத்தி, முன்னேறிய வயதின் முனையிலேயே மிகச் சரியான தன்மை எப்பொழுதும் உள்ளது என்று முடிவு செய்கின்றார்கள். இவ்விதமாக மக்கள் சிந்திக்கின்றனர் என்ற உண்மையானது, இளம் ஊழியர் முன்னெச்சரிக்கையையும் மதிப்பையும் பயன்படுத்துமாறு வேண்டிக் கொள்கிறது. தீமோத்தேயுவின் இளம் வயதினிமித்தம் ஒருவர் அவரைத் தாழ்வாக நோக்காதபடி அல்லது அவரைப் புறக்கணித்து[21] விடாதபடி இந்த மாதிரியை நாடுமாறு பவுல் தீமோத்தேயுக்குக் கட்டளையிட்டார் (4:12அ). இளம் பிரசங்கியார்களும் மற்றும் சகோதரர்களும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒரு பிரச்சனையைப் பவுல் முன் வைத்தார். சில இளம் சுவிசேஷகர்கள், அவர்களைப் பற்றி இலேசாக எண்ணிய அல்லது அவர்களை விரோத எண்ணத்துடன் நடத்திய சகோதரர்களால் "கொல்லப் பட்டுள்ளனர்." இப்படிப்பட்ட நடத்துதலானது தவறானதாகவும் ஆழமாய்ப் புண்படுத்துகிறதாகவும் இருக்கையில், இளம் மனிதர்கள் கர்த்தருடைய ஊழியத்திற்கு சகோதரர்களால் கடிந்துரைகளை அழைக்கக் கூடிய வழியில் பதில்செயலை சுலபமாய்ச் செய்ய முடியும்.

பவுல் தீமோத்தேயுக்கு, "உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு ..." (4:12அ) என்று கூறினார். "இளமை" (Gk.: *niotetos*) என்பதற்கான பவுலின் வார்த்தையானது நாற்பதாண்டுகள் வயது வரை[22] உள்ள எவரொருவரோடும் தொடர்பு படுத்தப்பட முடியும். பவுல் தீமோத்தேயுவுக்குக் கொடுத்த தெளிவான மற்றும் பொறுப்புள்ள பணிகளுக்கு அவர் (தீமோத்தேயு) இளையவராகவே இருந்தார், மற்றும் எல்லா வயதுகளிலும் உள்ள மக்களுடன் தொடர்பு கொள்வது எவ்வாறு என்பதை அவர் கற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாய் இருந்தது. தீமோத்தேயுவுக்குக் கொடுக்கப்பட்ட அதே பொறுப்புகள் இன்றைய நாட்களின் இளம் சுவிசேஷகர் ஒருவரின் ஊழியத்திலும் கூட உள்ளடங்கியிருப்பதால், பவுலினால் தரப்பட்ட இந்த முன்னெச்சரிக்கை மிகவும் நடைமுறைக்கு உகந்ததாக உள்ளது.

## பாடம் 13: பிரசங்கியாரின் தோற்றமும் நோக்கமும் (4:12ஆ-16)

ஒரு இளம் சுவிசேஷகரால் அமைக்கப்படுவதாயிருக்கும் உதாரண மானது,[23] அவரது பண்பு, அவரது நடக்கை, அவரது அக்கறை மற்றும் அவரது பரிசுத்த தன்மை ஆகியவற்றை எடுத்துரைக்கிறது.

### அவரது பண்பு (வ. 12ஆ)

தீமோத்தேயு ஐந்து வழிகளில் ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டியிருந்தார்:

பேச்சு - அவரது வார்த்தைகள்
நடக்கை - அவரது பணி
அன்பு - ஊழியத்தில் அவரது ஆவி
விசுவாசம் - வேத வசனங்களில் அவரது நிலைப்புத் தன்மை
கற்பு - அவரது வாழ்வின் பாவமற்ற தன்மை

இந்த அட்டவணையானது, ஒரு இளம் மனிதர் ஒரு சுவிசேஷகர் என்ற வகையில் தம் ஊழியத்தில் கடந்து செல்லும் எல்லா அடிநிலைகளையும் சுருக்கமாகத் தொகுக்கின்றது. இது வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் பொறுப்பைப் பணிக்கின்றது.

*அறிவித்தல்கள்: "பேச்சில்"* [தமிழில் "வார்த்தையில்"] (Gk.: *en logo*). இதே கிரேக்கச் சொற்றொடரானது மீண்டும் 1 தீமோ. 5:17ல் மூப்பர்களின் தொடர்பாகக் காணப்படுகிறது. இதன் அர்த்தத்திற்கு ஒரு விரிவாக்கம் அங்கு தரப்படும். இவ்விடத்தில் இதன் பயன்பாடு அந்த சந்தர்ப்பப் பொருளில் இதன் பயன்பாட்டை விளக்க உதவுகிறது. அந்தச் சொற்றொடர் ஒரு சுவிசேஷகரின் வாழ்வினுடைய மையத்தை நோக்கி சிந்தையைப் பதிக்கிறது. அவர் நித்திய கோட்பாடுகள் பற்றியும் மக்களின் தனிப்பட்ட தேவைகள் தொடர்பாகவும் வெளிப்படையாகவும் தனிப்பட்ட வகையிலும் தொடர்ந்து பேச வேண்டும். அவர் என்ன கூறுகிறார் என்பதும், மற்றும் அதை எவ்வாறு கூறுகிறார் என்பதும் பல வகையான மனித பதில் செயல்களைத் தருவிக்கும்.

*செயல்கள்: "நடக்கையில்."*[24] இது "நீங்கள் என்ன கூறுகிறீர்களோ அதை என்னால் கேட்க முடியாது, ஏனெனில் நீங்கள் எப்படிப்பட்டவர் என்பதை நான் மிகவும் அறிந்துள்ளேன்" என்ற நைந்த சொற்றொடரின் மேலாகச் செல்லுகிறது. அதை நாம் திருப்பிப் போடும் பொழுது, இயேசு கூறியவற்றை மக்கள் கவனித்துக் கேட்டது ஏன் என்பதற்கு நாம் ஒரு விளக்கத்தைப் பெறுகின்றோம். கிறிஸ்துவின் வாழ்வினுடைய நிழல் அவரது பேச்சுக்கு முன்பாக எப்பொழுதும் சென்றது. அவருடைய அடிச்சுவடுகளில் பின்பற்றிச் செல்லும் யாவருக்கும் இது இவ்வாறே இருக்க வேண்டும்!

*நிலைப்பாடு: "அன்பில்."*[25] தேவனுக்கு முன்பாகவும் மனிதருக்கு

முன்பாகவும் சாதகமான நிலையில் வாழ்வதற்குத் தேவையான உணர்வுப் பூர்வமான அக்கினி இங்குள்ளது. நமது வாழ்வின் வகையானது மேன்மை யான மற்றும் பொன்னான உதாரணமாய் இருக்கும்படி நாம் நடந்து கொள்ள, அன்பு நம்மைத் தூண்டுகிறது (யோவா. 13:34, 35; 1 கொரி. 13:1-8).

*தீர்மானம்: "விசுவாசத்தில்."* விசுவாசமானது கேட்டுக் கொள்ளப்படும் வகையில் பேச, வாழ மற்றும் அன்பு செய்ய ஒருவர் செய்யும் தீர்மானத்தில் பலத்துடன் நிலைத்திருக்கத் தெய்வீக ஊக்குவிப்பை அளிக்கிறது. இது தற்காலத்திய சோதனைகளுக்கு அப்பால் நித்தியமான வெற்றியை நம்பிக்கையுடன் ஒருவர் கண்ணோக்கப் பலன் அளிக்கிறது (யாக். 1:2-4; ரோமர் 8:22-25; எபி. 11:9-19).

*ஒழுக்கமுறை: "கற்பில்."*[26] இங்கு நாம் மற்ற எல்லாப் பண்புகளின் தொகுப்பைக் காண்கின்றோம். சுவிசேஷகரின் பேச்சும், வாழ்வும் அல்லது விசுவாசமும் சுத்தமாய் இருப்பதை ஒழித்தால், அவரது பண்பு சிதைவுறு கிறது மற்றும் அவரது உதாரணம் தொலைகின்றது. சுத்தத்தின் அவசியம் பற்றி வேத வசனங்கள் வலியுறுத்துகின்றன (1 பேது. 1:22; 1 தீமோ. 1:5).

இந்த எல்லா வழி வகைகளிலும் ஒரு முன்மாதிரியாக இருக்கும் படிக்குத் தீமோத்தேயுவுக்குப் பவுல் அறைகூவல் விடுத்தார். ஒரு பிரசங்கியார் இந்த அறைகூவலைச் சந்திக்க முடியுமென்றால், அவர் என்ன ஒரு வாழ்வை வாழுவார்! மற்றும் அவர் எதையெல்லாம் செய்ய வல்லவராயிருப்பார்!

## அவரது நடக்கை (வ. 13)

சுவிசேஷகரின் நடக்கை குறித்துப் பவுல் மூன்று கட்டளைகளைக் கொடுத்தார். அவை ஒவ்வொன்றுடனும் அவர் "எவ்வாறு செய்ய வேண்டும்" என்ற அறிவுறுத்தல்களை இணைத்தார்.

தக்க வகையிலான நடக்கைக்கு "வாசித்தல்"[27] என்பது முதல் திறவுகோலாக உள்ளது. இது தினமும் வேதாகமத்தை வாசிப்பவராய் இருப்பதைக் காட்டிலும் அதிகமானவற்றை உள்ளடக்குகிறது. பவுல் நோக்கம் கொண்டதை ஒருவர் சாதிப்பதற்கு அவர் ஆராய்ச்சி, வார்த்தைப் படிப்பு செய்தல், மனப்பாடம் செய்தல், தியானித்தல், ஒப்பிடுதல், மறுகண்ணோட்டமிடுதல் ஆகியவற்றைச் செய்ய வேண்டியது அவசிய மாகும். இந்தப் பணியானது, இலேசான இருதயம் கொண்ட கற்பவருக் கானதல்ல, ஏனெனில் அவர் "திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப் படுகிறவராக" (1 தீமோ. 5:17) இருக்க வேண்டும்.

"புத்தி சொல்லுதல்"[28] என்பது தேவபக்தியுள்ள நடக்கைக்கான இரண்டாம் திறவுகோலாக உள்ளது. மனிதத் தேவைகள் யாவையும் சந்திப்பதற்கு, ஒருவர் ஆறுதல் கூறுதல், தேற்றுதல், கெஞ்சுதல், மன்றாடுதல், வேண்டுகோள் விடுத்தல், உற்சாகப்படுத்துதல், அறிவுறுத்துதல், மற்றும் புத்தி கூறுதல் ஆகியவற்றைச் செய்தல் அவசியமாய் இருக்கும். இந்த புத்திமதிகள் யாவும் "ஆரோக்கியமான உபதேசத்தில்" செய்யப்பட வேண்டியவைகளாய் உள்ளன என்று அறிவிக்கிற தீத்து 1:9ஐ இப்பொழுது

கூட்டிக் கொள்ளுங்கள். இந்தப் பணிக்கு அவசியமாக உள்ள நடைமுறைப் படுத்தப்படும் சத்தியத்தைப் பற்றிய அறிவுதான் என்ன! தேவனுடைய வசனமானது இந்தத் தேவைகள் யாவற்றையும் சந்திக்க முடியும் என்பதில் எவரேனும் ஐயம் கொள்ளுகின்றாரா? எத்தனை சுவிசேஷகர்கள், தாங்கள் ஒருவரை ஆறுதல் படுத்த, இன்னொருவரை உற்சாகப்படுத்த, இன்னும் ஒருவருக்கு அறிவுறுத்த, மற்றும் தேவையான வகையில் புத்தி கூற - இவை யாவற்றையும் ஆரோக்கியமான உபதேசத்தில் செய்ய - நன்முறையில் சத்தியத்தை அறிந்துள்ளனர்?

"போதித்தல்"[29] என்பது நடக்கைக்கான பவுலின் மூன்றாம் திறவு கோலாக உள்ளது. ஒருவர் முழுமையடையும் பொழுது அவர் தனது போதகரைப் போலிருப்பார் என்று ஒரு தெளிவான விளக்கம் லூக்கா 6:40ல் உள்ளது. சீஷர் தமது போதகரைப் போலாவது போதுமானது என்று மத்தேயு 10:25 கூடுதலாகக் கூறுகிறது. உண்மையாகவே போதகர் என்பவர் ஒரு பிரதான ஊழியக்காரராகவும் (தேவனுக்காகப்) பேசுபவராகவும் இருக்க வேண்டும். எத்தனை போதகர்களும் சுவிசேஷகர்களும் இந்த அறைகூவலைச் சந்திக்கின்றார்கள்?

இந்த மூன்று அறைகூவல்களும் "ஜாக்கிரதையாயிரு"[30]க்கும்படியான கட்டளையுடன் இணைவு பெற்றுள்ளன. இப்பொழுது தரப்பட்ட மூன்று திறவுகோல்களிடத்தில் திரும்பிச் சென்று இந்தக் கருத்தை நடைமுறைப் படுத்துங்கள். இவ்வகையான நடக்கையில் ஜாக்கிரதையாய் உள்ள சுவிசேஷகர் தம்மை ஒருக்காலும் செய்வதற்கு ஊழியம் இல்லாத நிலையில் காண மாட்டார்!

தேவனுடைய வசனத்தை ஆழமாய் அறிவதில் நியமம் அமைப்பது என்பது ஒரு சுவிசேஷகருக்கு இன்றியமையாதது என்பது தெளிவு. இது அவ்வளவு இன்றியமையாததாக இருப்பதால், நாம் தேவனுடைய வசனத்தை அறியக் கூடிய ஐந்து அணுகுமுறைகளை ஆய்வு செய்வோம்:

1. நாம் அவருடைய வசனத்தை அறிவதற்கான மனவிருப்பம் அல்லது வேட்கை கொண்டிருக்க வேண்டும் (யோவா. 7:17).

2. நாம் உண்மையில் அது தேவனுடைய வசனமாகவே உள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் (1 தெச. 2:13; 2 பேது. 1:20, 21).

3. நாம் அதைக் கேட்கிறவர்களாய் மட்டுமின்றி அதின்படி செயல் படுகின்றவர்களாயும் இருக்க வேண்டும் (யாக். 1:23-25).

4. நாம் ஆசீர்வதிக்கப்படுவதற்கு தேவனுடைய வசனத்தின் மீது தியானமாயிருக்க வேண்டும் (சங். 1:1-3; 119:52, 55, 56).

5. நாம் இதில் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும் (யோவா. 8:31, 32).

## அவரது அக்கறை (வ. 14)

சுவிசேஷகரின் பண்பு மற்றும் நடக்கை ஆகியவற்றுக்கு இந்தப் பெரிய பணியைக் கொடுத்துள்ள பவுல், தமது வேண்டுகோளில் பெரும் முக்கியத் துவம் வாய்ந்த அக்கறையொன்றை உட்புகுத்தினார்: "... அசதியா யிராதே."[31] அசதியாயிருப்பதில் சுவிசேஷகர் ஒருவரின் தோல்விக்கான

*நான்கு காரணங்களை நாம் காண்கின்றோம். பவுலின் கட்டளைகளைப் புறக்கணிப்பவர், (1) கவனமாய் இருக்க மாட்டார், (2) கவனித்துக் கேட்க மாட்டார், (3) அக்கறை கொள்ள மாட்டார் (4) ஆயத்தம் செய்ய மாட்டார். பிரசங்கியாரே, உங்கள் பலவீனம் என்னவாக உள்ளது?*

இந்த சந்தர்ப்பப் பொருளில் பவுல் எடுத்துரைத்த குறிப்பிட்ட அசதி என்பது ''ஆவிக்குரிய வரத்துடன்'' தொடர்புடையதாக உள்ளது. தீர்க்கதரிசனத்தின் மூலம் தரப்பட்ட இவ்வரமானது (2 தீமோ. 1:6ஐக் காணவும்) தெய்வீக அங்கிகரிப்பைக் காண்பித்தது. இது மூப்பராகிய சங்கத்தார் கைகளை வைத்துக் கொடுக்கப்பட்டதால் மனித அங்கிகரிப்பைக் காண்பித்தது (அப். 13:1-3; 1 தீமோ. 5:22). இப்படிப்பட்ட வரமானது இலேசாக எண்ணப்படக் கூடாததாய் இருந்தது.

ஒவ்வொரு சுவிசேஷகரும் தேவனுடைய கிருபையாலும் மனிதருடைய நற்பண்பினாலும் தமக்கு அருளப்பட்ட அங்கிகரிப்பை மதிக்க நாட வேண்டும். கிறிஸ்தவ மனிதர்கள் ஊழியம் செய்வதற்கான இந்த வாய்ப்பை மதிக்க வேண்டுமென்று பவுல் ஒரு கடைசி வேண்டுகோளை ஏற்படுத்தினார்.

## அவரது பரிசுத்த தன்மை (வ. 15, 16)

இந்த அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பண்பும் நடக்கையும், ஒருவர் இந்தக் கொள்கைகளில் "பிரயாசப்படவும்" மற்றும் "ஊக்கமாய் இருக்கவும்"[32] வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கின்றன. மீண்டும் பவுல் பயன்படுத்திய வினைச் சொல்லின் நிகழ்கால வடிவமானது ஒருவர் அதை செய்து கொண்டே இருக்க வேண்டுமென்றும், கட்டளைச் சொல்லானது அது செய்யப்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது. பணியின் முக்கியத்துவம்/தீவிரத்தன்மை என்பது இவ்வார்த்தையின் அர்த்தத்தில் காணப்படுகிறது, இவ்வர்த்தமானது, "செய்யத் திறமையுள்ள" வராய் இருத்தல் என்ற கருத்தையும் உள்ளடக்குகிறது. அது பவுலின் வேண்டுகோளுக்கு உண்மையிலேயே பொருத்தமுள்ளதாகின்றது. ஒருவர்கூட கவனிக்கவில்லையென்றால் செயல்பட வேண்டிய அவசியமே இல்லை. இருப்பினும், ஒரு பிரசங்கியாரின் செல்வாக்கு - மேன்மையான தன்மையிலும் தூய்மையிலும் - உயர் நடக்கையின் உற்பத்தியாய் இருக்க வேண்டும் என்று பவுல் அறிந்திருந்தார். கிறிஸ்தவ அமைப்பில் உதாரணங்கள் மற்றும் நியம வடிவமைப்புகள் ஆகியவை தேவையில் உள்ள ஆத்துமாக்களின் வாழ்வைப் பிடிப்பதற்கு மையமாக உள்ளன. தேவனுடைய மக்கள் ஒரு வசீகரமான வழிமுறையில் நடந்து கொள்ள வேண்டும்.

தேவனுடைய மக்கள் செயல் நிகழ்த்தும் பொழுது, அவர்கள் ''தேறுகிறது[33] யாவருக்கும் விளங்கும்படி'' செயல்படுகின்றார்கள். இவ்வார்த்தையின் வினைவடிவம் "அடித்தலினால் வெளி நீட்டுதல்" என்று அர்த்தப்படுவது கவனிக்க ஆர்வமுடையதாக உள்ளது. பவுல் தமது சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்தினார் (1 கொரி. 9:27). "கண்டு பிடிப்புகள்

[மேம்பாடுகள்] என்பவை ஏவுதலினால் ஏற்படுவதை விட அதிகமான உணர்ந்தறிதலினால் வருகின்றன'' என்பது தாமஸ் எடிஸனின் உற்று நோக்கலாய் இருந்தது. ஒரு புதிதான சிந்தனையின் பிறப்பைக் காட்டிலும் கொடிய வேதனை தருவது வேறொன்றுமில்லை என்று இன்னொருவர் கூறினார். மேன்மையான ஊக்கமும் அர்ப்பணிப்பும் வளர்ச்சிக்கு அவசியமானவை என்பது தெளிவான உண்மையாய் உள்ளது.

மேலும், ஒருவர் தமது வளர்ச்சியானது இந்த சந்தர்ப்பப் பொருளின் ஏவுதலினால் தரப்பட்ட நடக்கையுடன் தொடர்புடையதாய் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பொதுத் தொடர்புகளின் ஏணியில் பொய்யான ஒரு மேம்பாட்டில் நாம் சார்ந்திருக்க முடியாது. வாழ்வை மாற்றும் சத்தியத்திற்கு மாறாக செவித்தினவுள்ள கருத்துக்களை முன் வைப்பதன் மூலம் நாம் புகழ்ச்சியை நாடக்கூடாது (2 தீமோ. 4:1-5; ரோமர் 12:1, 2 ஆகியவற்றைக் காணவும்).

சுவிசேஷகரின் வளர்ச்சியானது அவருடைய தனித்தன்மை மற்றும் அறிவித்தல் ஆகியவற்றில் மக்களாலும் தேவனாலும் சோதிக்கப்படும். வசனம் 16ல் பவுல் தீமோத்தேயுவுக்கு "உன்னைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு'' என்று கூறினார். இந்த ஊழியத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள - "இரட்சிப்பின் உறுதிப்பாடு"[34] என்ற - மகிமையுள்ள நோக்கத்தின் - காரணத்தினால் கவனம் நிறைந்த உற்றுநோக்கல் ஒழுங்கமைவில் இருக்க வேண்டும்.

இவ்விடத்தில் ஒரு பூரணப் பிரமாணத்திலிருந்து வந்த ஒரு பூரணமான திட்டம் உண்மையாகவே உள்ளது. பவுலின் ஏவுதல் பெற்ற அறிவுறுத்து தலைப் பின்பற்றுவதினால் ஒருவர் தமக்கும் தம் போதனையைக் கேட்பவருக்கும் "இரட்சிப்பை உறுதிப்படுத்தி" கொள்ள முடியும்.[35]

## தொகுப்புரையில்

அதிகாரம் 2 முதல் இந்த இடம் வரையிலான தொகுப்புரையில், பவுல் நம்முடன் பகிர்ந்து கொண்டுள்ளது இவ்விடத்தில் உள்ளது:

எல்லா மனிதரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் சித்தம் கொண்டுள்ள தேவன் (2:4) இதைச் சாத்தியப்படுத்து வதற்காகத் தம்முடைய திட்டத்தை விரித்து வைத்துள்ளார். இது ஆண்களும் பெண்களும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் (3:1-15) என்று பவுல் தீமோத்தேயுவுக்குக் கொடுத்த அறிவுறுத்துதலைப் பின்பற்றுவதினால் தலைவர்களாயிருக்கத் தயார் செய்து கொள்ளுகிற ஜெபம் நிறைந்த மக்களால் (2:1-5) சாதிக்கப்பட வேண்டியதாக உள்ளது.

இந்த ஆத்துமாக்கள் தங்களுக்குத் தரப்பட்ட அப்போஸ்தலிக்க உதாரணங்களாலும் பகிர்ந்து கொள்ளப்பட்ட ஏவுதலின் அறிவுறுத்தல் களாலும் (4:6-11) பிறரை வழி விலகிச் செல்ல வழிநடத்தும் (4:1-5) பிசாசின் முயற்சிகளுக்கு மேலாக எழும்பக் கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

சுவிசேஷகர்களின் இன்றியமையாத திறவுகோலான அவரது பண்பு, நடக்கை, அக்கறை மற்றும் பரிசுத்த தன்மை என்பது பேசுகிறவருக்கும்

பாவிக்கும் இரட்சிப்பை உறுதிப்படுத்தும் ஆவியில் தேவனுடைய வசனத்தை அறிவிப்பதாயிருக்கும் (4:12-16).

சுவிசேஷத்தைப் பரப்புவதற்கான தேவனுடைய திட்டம் முதல் நூற்றாண்டில் செயல்பட்டது (கொலோ. 1:23; அப். 19:10; 20:18-32), மற்றும் இது தேவனுடைய ஊழியர்கள் இந்த மாபெரும் மகிமையுள்ள கொள்கைகளைச் செயல்படுத்தும் எந்த நூற்றாண்டிலும் எந்த இடத்திலும் அதே அளவு செயல் திறன் உள்ளதாக இருக்கும்!

---

குறிப்புகள்:

[1]"விலகிப் போவார்கள்" (Gk.: *apostasontai*) என்பது எதிர்கால, சுட்டிக் காட்டுகின்ற, மைய வார்த்தையாக உள்ளது. மைய வினையானது இதை அவர்கள் தங்களுக்குத் தாங்களே செய்து கொள்வார்கள் என்பதைக் குறிக்கின்றது. இந்த விலகிப் போகுதல் என்பது இவ்விஷயத்தில் அவர்கள் மனவிருப்பம் கொண்டிருந்ததில்லை என்ற கால்வினியக் கருத்து எதற்கும் முரண்படுகிறது. ஒவ்வொருவரும் ஒரு (சுய) சித்தத்தைக் கொண்டுள்ளனர்; சிலர் அதை விசுவாசத்திலிருந்து விலகிப் போவதற்குச் செயல்படுத்துவது கவலைக்குரியது! [2]"விலகிப் போகுதல்" என்பதற்கான கிரேக்க வார்த்தையானது "விலகி நிற்க மேற்கொள்ளுதல், பின்வாங்கக் காரணமாகுதல், புறம்பே செல்லுதல் ... விசுவாசமற்றவராகுதல் ..." என்று அர்த்தப்படுகிற *aphistemi* என்பதிலிருந்து வருவதாய் உள்ளது (C. G. Wilke and Wilibald Grimm, *A Greek - English Lexicon of the New Testament*, trans. and rev. Joseph H. Thayer [Edinburgh, Scotland: T. & T. Clark, 1901; reprint ed., Grand Rapids, Mich.: Baker Book House, 1977], 89). [3]வஞ்சித்தல் (Gk.: *planos*) - "... அலைதல், நோக்கமின்றி சுற்றித்திரிதல் ... தவறாய் வழிநடத்துதல், தவறுக்குள் வழிநடத்துதல் ... [மற்றும் பெயர்ச்சொல் என்ற வகையில் இது] ஒரு நாடோடியை, ஊர் சுற்றியை, மோசடிக்காரனை ... ஒரு நாசமாக்குபவனை, வஞ்சிப்பவனை [குறிக்கிறது]" (Thayer, 515). [4]பிசாசுகள் (Gk.: *daimonion*) - "... (தீய) ஆவி ... பிசாசு, ஒரு தீமையான ஆவி ... இந்த ஆவிகள் விழுந்து போன தூதர்களாகக் குறிப்பிடப்படுகின்றன, 2 பேதுரு 2:4; யூதா 6; மற்றும் இவை தங்களின் பிரபு என்ற வகையில் சாத்தானுக்கு இப்பொழுது கீழ்ப்பட்டுள்ளன ... இவைகள் அற்புதங்களைச் செய்யும் வல்லமை கொண்டுள்ளன, ஆனால் அந்த அற்புதங்கள் நன்மைக்கானவைகளாய் இருப்பதில்லை ... பிதற்றும் பித்த நிலை, மத்தேயு 8:28; மாற்கு 5:2; ... லூக்கா 8:27" (Edward Robinson, *A Greek & English Lexicon of the New Testament* [New York: Harper & Brothers, 1863], 155-56). [5]உணவுகள் (Gk.: *broma*) - "... உண்ணத் தக்கவைகள், உணவு, அதாவது பாலுக்கு [எதிரான வகையில்] திட உணவு, 1 கொரி. 3:2 ... மோசேயின் பிரமாணத்தால் அனுமதிக்கப்பட்ட இறைச்சி உணவுகளைப் பற்றிப் பேசப்பட்டது, எபிரெயர் 9:10; 13:9. மேலும் யூதக் கிறிஸ்தவர்கள் உண்பதற்கு மனச்சாட்சியில் உறுத்தப்பட்ட இறைச்சி உணவுகள், ரோமர் 14:15 ... 20; 1 கொரி. 8:13" (Robinson, 133). [6]William Barclay, *The Letters to Timothy, Titus and Philemon*, The Daily Study Bible Series, rev. ed. (Philadelphia: Westminster Press, 1960), 108-9. [7]Ibid., 108. [8]இடுதல் (Gk.: *hupotithemi*) - "கீழாக அமைத்தல் அல்லது இடுதல், கீழாகக் கிடத்துதல் ... ஆதரித்தல் ... வசனத்தின் கீழாக ஒருவரின் கழுத்தைக் கிடத்துதல் ... ஒருவரின் வாழ்வை ஆபத்துக்குள்ளாக்குதல் ... எவராவதொருவரின் சிந்தைக்குக் கீழ்க் கொண்டு வருதல், ஒரு போதகர் என்ற வகையில் ஆலோசனையளித்தல், ஒருவரின் சிந்தையில் இடுதல்" (Robinson, 752).

[9]Russell Bradley Jones, *The Epistles to Timothy* (Grand Rapids, Mich.: Baker Book House, 1960), 34-35. [10]William Hendriksen, *A Commentary on 1 and 2 Timothy and Titus* (London: The Banner of Truth Trust, 1964), 149.

[11]*ஊட்டப்படுத்துதல்* (Gk.: *entrepho*) - ''*கல்வியளித்தல்; சிந்தையை வடிவமைத்தல்*'' (Thayer, 219). [12]*அநுசரித்தல் (*Gk.: *parekolouthkas, parakoloutheo என்பதன் முற்று, குறிப்பு, முன்னிலை ஒருமை)* - "*நெருங்கிப் பின்பற்றுதல், துணை போகுதல், ... ஒருவர் செல்லும் இடமெல்லாம் அவரைக் கவனித்தல் ... புரிந்து கொள்ளுதல் ... அதன் ஓட்டத்தைப் பின் தொடர்தல், முழுமையாக ஆராய்தல், விசாரித்தல் ... ஒருவர் தனக்கு உறுதிப்படுத்துதல்*" (Thayer, 484). [13]*சீர் கேடானவை* (Gk.: *bebelos*) - "*பொதுவான, பரிசுத்தப்படுத்தாத இடங்கள் ... பரிசுத்தமின்மை*" (Robinson, 125). [14]*கட்டுக் கதைகள்* (Gk.: *muthos*) - "*புராணக் கதை, பொய்க் கதை, புராணம் 1 தீமோ. 1:4; 2 தீமோ. 4:4; தீத்து 1:14 ஆகியவற்றைக் காணவும்*" (Robinson, 462). [15]William Hendriksen, *A Commentary on 1 and 2 Timothy and Titus* (London: The Banner of Truth Trust, 1964), 150. [16]*ஒரு இளம் ஊழியர் முதிர் வயதான பெண்களால் குறைந்தபட்சம் மூன்று வழிகளில் புண்படுத்தப்படக் கூடும்: (1) அவர்களின் பாரம்பரியத்தை தேவனுடைய வசனம் என்பதாக அவர் கவனிக்கலாம், அவர்கள் முதியவர்களாயிருப்பதால் ஞானமுள்ளவர்கள் என்று யூகித்து இவ்வாறு செய்யலாம் (ஆனால் அவர்கள் வேறு விதமாய் இருக்கக் கூடும்). முதிய சகோதரி ஒருவர் ஒரு இளம் பிரசங்கியாரை "முடிவு ஜெபம்" செய்வதற்குப் பதில் அவர் ஒரு பாடலுடன் ஆராதனைக் கூட்டத்தை முடித்து வைத்ததற்காகக் கடிந்து கொண்டார். (2) சுவிசேஷகர் சுவிசேஷப் பணியின் மேன்மையை அடைந்துள்ளதாக நினைக்கும் வரையில் அவர்களின் பாராட்டுகளை அவர் கவனிக்கலாம் ("நீங்கள் இவ்வளவு இளைஞராயிருந்தும் எவ்வளவு மாபெரும் ஊழியக்காரராய் இருக்கிறீர்கள்!"). இயேசுவே மாதிரியாக, ஆவிக்குரிய உண்மையான அளவு கோலாக இருக்கின்றார் என்பதைப் பிரசங்கியார் புறக்கணித்து விடக் கூடாது (2 கொரி. 13:5). (3) கடந்த கால நிகழ்ச்சிகளை நினைவுக்குக் கொண்டு வர விரும்பும் முதிய பெண்களுடன் அவர் அதிகமான நேரத்தைச் செலவிட்டு, முக்கியமான பிற ஊழியத்தைச் செய்யாமல் விட்டு விடலாம். தனிமையில் உள்ள விதவைகளுக்கு அதிகமாக நேரத்தையும் கவனத்தையும் கொடுக்கின்ற பிரசங்கியார் அவர்களின் பார்வையில் மாபெரும் நபராய் இருப்பார், ஆனால் அவர்கள் தங்கள் (முதிர்) வயதின் காரணத்தினால் பிரசங்கியாரின் வேகமாய் ஆகக் கூடாத மெதுவான வேகத்தில் இயங்குவார்கள்! மெதுவாக இயங்குவதே பிரசங்கியாரின் பழக்கமாகி விடக் கூடாது! முதிர் வயதானவர்களைப் புறக்கணிக்காததும் (1 தீமோ. 5:1, 2) மற்றும் தமது படிப்பு, பணியைத் தடை செய்யாததுமான ஒரு சமான நிலையைப் பிரசங்கியார் நாட வேண்டும்.* [17]*முயற்சி பண்ணு* (Gk.: *gumnazo*) - "*... உடல் ரீதியாகவோ அல்லது மனரீதியாகவோ எவ்வழியிலாவது தீவிரமாக முயற்சி செய்தல் ... தேவ பக்தியுள்ளவராவதற்கு உண்மையாய்ப் பிரயாசப்படுகிற ஒருவரைப் பற்றிய விஷயம்*'' (Thayer, 122). [18]*பிரயாசம்* (Gk.: *kopiao*) - "*... தளர்வடைதல், களைப்படைதல், கடின உழைப்பு அல்லது சுமைகள் அல்லது துக்கத்தினால் சக்தி தீர்ந்து போகுதல் ... தேவன் மற்றும் கிறிஸ்து ஆகியோரின் இராஜ்யத்தை அறிவிப்பதிலும் மேம்படுத்துவதிலும் போதகர்களின் கடின உழைப்பு முயற்சிகளைப் பற்றியது*'' (Thayer, 355). [19]*கடும் முயற்சி* (Gk.: *agonizomai*) - "*... உடற்பயிற்சி விளையாட்டுக்களில் போட்டியிடுதல் ... சுவிசேஷத்தின் மீது நம்பிக்கையற்ற தன்மையின் சிரமங்கள் மற்றும் அபாயங்களுடன் போராடுதல் ... வலுவான வைராக்கியத்துடன் உழைத்தல், சிலவற்றைப் பெறுவதற்காகக் கடினமாக உழைத்தல்*'' (Thayer, 10). [20]*இது விசுவாசியாத சிலரைக் கூடத் தேவன் [பிறகு]*

இரட்சித்துக் கொள்வார் என்று அர்த்தப்படுவதில்லை (எபி. 11:6ஐக் காணவும்). "விசேஷமாக விசுவாசிகளுக்கும்" என்ற பவுலின் தனிச் சிறப்பான சொற்றொடர் அமைப்பிற்கு மூன்று விளக்கங்கள் உள்ளன. முதலாவது, சிலர் இன்னும் விசுவாசம் கொள்ளவில்லை ஆனால் கற்றுக் கொள்ளும் பொழுது விசுவாசம் கொள்வார்கள் என்று பவுல் மறைவாய்ச் சுட்டிக் காண்பித்திருக்கக் கூடும் (யோவா. 9:35, 36; லூக். 23:34ஐ அப். 2:36-41 உடன் ஒப்பிட்டுக் காணவும்). இரண்டாவது, ஆழ்ந்து சிந்திக்கப்படத் தகுதி வாய்ந்த ஒரு விளக்கத்தை ஹென்ரிக்ஸென் முன்னிறுத்தினார். அவர், இரட்சகர் (Gk.: *soter*) என்ற வகையில் தேவன் (பாவம் தவிரப் பிற) பல வழிகளில் இருந்து மனிதனை விடுவித்திருக்கிறார் அல்லது மீட்டிருக்கிறார். அவர் இஸ்ரவேலரை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார், ஆனால் அடிமைத்தனத்தில் இருந்து மீட்கப்பட்ட அனைவரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் சென்று சேர முடியவில்லை (1 கொரி. 10:5; எபி. 3:7-4:8). அவிசுவாசத்தினால் சிலர் பிரவேசிக்கத் தவறி விட்டார்கள். எனவே ஒருவர் பாவத்திலிருந்து இரட்சிக்கப் படலாம் (மாற். 16:15, 16; அப். 2:38-47), ஆனால் பிறகு அவர், கடைசி நாட்களில் வெளிப்படுத்தப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கும் இரட்சிப்பைப் பெறாதபடிக்கு விழுந்து போகலாம் (எபி. 6:4-6; 10:23-31ஐக் காணவும்). ஒருவர் விசுவாசத்தைக் காத்துக் கொள்ள வேண்டும் ஏனெனில் அதுவே உலகத்தை ஜெயிக்கிற ஜெயமாக உள்ளது (1 யோவா. 5:4; வெளி. 2:10). ஆகையால், பல வழிகளில் இரட்சிக்க கூடிய தேவனுடைய வல்லமையே இந்தக் கண்ணோட்டத்தின் வலியுறுத்தமாக உள்ளது, ஆனால் விசுவாசிகளை நித்தியத்திற்கும் இரட்சித்தல் என்பதே அவருடைய தலை சிறந்த ஊழியமாய் இருக்கும் (எபி. 7:25; 5:8, 9ஐக் காணவும்) என்று எடுத்துரைத்தார். மூன்றாவது, கிரேக்கச் சொற்றொடராக்கத்தைக் கவனியுங்கள். இதன் ஆங்கில (மற்றும் தமிழ்) மொழியாக்கமே இந்தச் சொற்றொடர் நம்மைக் குழப்புவதற்குக் காரணமாயிருக்கலாம். "சிறப்பாக" அல்லது "விசேஷமாக" (Gk.: *malista*) என்ற சொல்லானது சில விஷயங்களில் "குறிப்பாக" என்றும் அர்த்தப்படுகிறது என்று Arndt மற்றும் Gingrich ஆகியோர் விவரித்துள்ளனர், அத்துடன் "ஒரு கேள்விக்குப் பதில் அளிப்பதில்: 'மிகவும் உறுதியாக, நிச்சயமாக' என்று கூறுவதையும் கூட அவர்கள் விவரித்துள்ளனர்" (Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich [Chicago: University of Chicago Press, 1957], 490). அப். 26:3; 20:38; 1 தீமோ. 5:17; பிலே. 16 ஆகியவை அந்த விவரிப்பு பொருந்தி வரக் கூடிய சில வசனங்களாக உள்ளன. இதை நாம் இவ்வாறு விவரித்தால், இக்கிரேக்கச் சொற்றொடராக்கமானது (*malista piston*) தேவன் மனிதரை மீட்பது என்பது "விசுவாசிகளை உறுதியாகவும்" அல்லது "விசுவாசிகளை மிகவும் நிச்சயமாகவும்" அல்லது "விசுவாசிகளைக் குறிப்பாகவும்" (அல்லது குறிப்பாக நான் விசுவாசிகளை அர்த்தப்படுத்துகின்றேன்) மீட்பார் என்று அறிவிப்பதாயிருக்கும். எல்லா மக்களிலும் அவர் இவர்களைத்தான் இரட்சிப்பார். இப்படிப்பட்ட கருத்தானது வேதாகம உண்மைகளுக்கு நிச்சயமாகவே பொருந்துகின்றது. இந்த மூன்று கண்ணோட்டங்களில் எதிலிருந்தும், விசுவாசியாத சிலரை தேவன் நித்தியத்திற்கும் இரட்சிக்கத் திட்டம் கொண்டுள்ளார் என்று எவரொருவரும் முடிவு செய்ய இயலாது. அந்தக் கருத்தானது எபி. 11:6; 5:8, 9 அல்லது யோவா. 8:24 உடன் முரண்படுகின்றது.

[21]புறக்கணித்தல் (Gk.: *kataphroneito*, இது *kataphroneo* என்பதன் நிகழ்கால நிபந்தனைச் சொல்லாக உள்ளது) - "... தாழ்வாகக் காணுதல், புறக்கணித்தல், இழிவுபடுத்துதல், விரோதத்துடன் நடத்துதல், .... இலேசாக எண்ணுதல், .... அல்லது சிலவற்றைப்பற்றி தவறான கருத்துக்களைக் கொண்டிருத்தல் ..." (Arndt and Gingrich, 421). [22]தீமோத்தேயு 34 மற்றும் 39 ஆண்டுகளுக்கிடையிலான வயதுடையவராய்

இருந்திருக்கலாம் என்று ஹென்ரிக்ஸென் மதிப்பிட்டார், அத்துடன் கூடுதலாக, இரேனியுஸ் அதை வாழ்வின் முதல் நிலை (இளமைப் பருவம்) என்பது 30 ஆண்டுகளை அரவணைத்து 40க்கு நீட்டிக்கப்பட்டது என்று எடுத்துரைத்தார் (Hendriksen, 157; *Irenaeus Against Heresies* 2.22). [23]*"எடுத்துக்காட்டு" (மாதிரி) என்பதற்கான கிரேக்க வார்த்தை tupos, "... காணக் கூடிய பதிவு ... அடையாளம், சுவடு, ... பிரதி, உருவம், வடிவம் ... போதித்தலின் மாதிரி ... ஒழுக்க வாழ்வில் உதாரணம், மாதிரி* [Arndt and Gingrich, 837-38]. *ஒரு இளம் ஊழியர் சில மக்களுக்கு இவற்றில் பலவற்றுக்கு மாதிரியாய் இருப்பார். பலருக்கு அதிகபட்சம் மாதிரியாய் இருத்தல் என்பது தெளிவான அறைகூவலாக உள்ளது.* [24] *நடக்கை* (Gk.: *anastrophe*) - *"நமது நடக்கை எல்லாவற்றிலும் பரிசுத்தமாய் இருக்க வேண்டும், 1 பேதுரு 1:15"* (Arndt and Gingrich, 61). [25]*அன்பு* (Gk.: *agape*) - *"... பிரியம், நற்சிந்தை ... உபகாரம் ... மனிதன் தேவனிடம் செலுத்தும் அன்பு ... தேவன் மனிதனிடம் செலுத்தும் அன்பு ... தேவன் கிறிஸ்துவிடம் செலுத்தும் அன்பு ... கிறிஸ்து மனிதரிடம் செலுத்தும் அன்பு"* (Thayer, 4). [26]*கற்பு* (Gk.: *hagneia*) - *"... வாழ்வின் பாவமற்ற தன்மை"* [Thayer, 7]; *"... சுத்தமான சிந்தை ... கற்புடைமை ... தவறாதிருக்கும் எல்லா நடத்தையுடனும் ... இளம் வயதினரின் முதல் கடமை என்ற வகையில் ... தூய்மையாய் நிலைத்திருத்தல்"* (Arndt and Gingrich, 10). [27]*வாசித்தல்* (Gk.: *anaginosko*) - *"... மிகச் சரியாக, நுணுக்கமாக அறிதல் ... மீண்டும் அறிதல், புரிந்துணர்தல் ... மிகச் சரியாக அறிந்து வித்தியாசப் படுத்துதல் ... வாசித்தலினால் அறிதல்"* (Robinson, 43). [28]*புத்தி சொல்லுதல்* (Gk.: *parakaleo*) - *"ஒருவரின் பக்கமாய் அழைத்தல், ஆறுதல் செய்தல், தேற்றுதல், கெஞ்சுதல், மன்றாடுதல், வேண்டுதல், உற்சாகமூட்டுதல், அறிவுறுத்தல், புத்தி கூறுதல்"* (Thayer, 482-83). [29]*போதகர்* (Gk.: *didaskalos*) - *"போதிக்கத் தகுந்த ஒருவர்"* (Thayer, 144); *"அறிவுறுத்துபவர், எஜமானர்"* (Robinson, 178). [30]*ஜாக்கிரதையாயிருத்தல் (Gk.: proseche, இது prosecho என்பதன் நிகழ்கால நிபந்தனைச் சொல்லாகும்) - " ... அருகில் கொண்டு வருதல் ... சிந்தையைத் திருப்புதல் ... கவனித்தல், கவனமாய் இருத்தல் ... அக்கறை கொள்ளுதல், அளித்தல் ... ஒருவர் தன்னைக் காத்துக் கொள்ளுதல், அதாவது எச்சரிக்கையாய் இருத்தல், ... ஒருவர் தம்மைப் பயன்படுத்துதல், ஒருவர் தன்னுடன் ஒன்றியிருத்தல், ஒரு நபரை அல்லது ஒரு விஷயத்தை பற்றிக் கொள்ளுதல் அல்லது ஒன்றியிருத்தல் ... ஒப்புக் கொடுத்தல் அல்லது அடிமைப்படுதல் ... சிந்தனைக்கு அர்ப்பணித்தல் அல்லது முயற்சித்தல்"* (Thayer, 546).

[31]*அசதி* (Gk.: *ameleo*) - *"... கவனமற்று, எச்சரிக்கையற்று இருத்தல் ... அக்கறை செலுத்தாமல் இருத்தல், புறக்கணித்தல்"* (Robinson, 36). [32]*ஊக்கம்* (Gk.: *meletao*) - *"... கவனத்துடன் இருத்தல், எந்த ஒன்றின் மீதும் கவனம் கொள்ளுதல், அதாவது நிகழ்த்துவதற்கு வல்லவராயிருக்கும்படி"* (Robinson, 449); *"... விளைவித்தல், பாடுகளை மேற்கொள்ளுதல் ... நினைத்தல், தியானித்தல்"* (Arndt and Gingrich, 501). [33]*தேறுகிறது* (Gk.: *prokope, prokopto* [Thayer, 540]) - *"... முன்னோக்கிச் செல்லுதல் ... முன்னேற்றம், இன்னும் முன்னேறுதல்"* (Robinson, 621). [34]*இரட்சித்தல்* (Gk.: *sozo*) *"... விடுவித்தல், அபாயம், இழப்பு, அழிவு ஆகியவற்றிலிருந்து பத்திரமாய்ப் பாதுகாத்தல், ... நோயுற்ற நபர்கள் பற்றியது ... குணமாக்கி நலத்தைத் திரும்பப் பெறும் வகையில் மரணத்திலிருந்து இரட்சித்தல் ... நித்திய மரணத்திலிருந்து, பாவத்தின் தண்டனை மற்றும் பரிதாபமான விளைவிலிருந்து இரட்சித்தல் பற்றியது, நித்திய ஜீவனைக் கொடுத்தல்"* (Robinson, 704). [35]*இங்கு தரப்பட்டுள்ள இன்றியமையாத கருத்து, கேட்பவருடன் தொடர்புடையதாக உள்ளது. "கேட்கிறவர்"* (Gk.: *akouo*) *என்ற வார்த்தையானது ஆராதனைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுதல் அல்லது "வீட்டில் வேதாகம வகுப்பில்" இருத்தல் என்பதை விட*

*அதிகமானவற்றை உள்ளடக்குகிறது என்பதைக் கவனிக்கவும். இவ்வார்த்தை பின்வருமாறு அர்த்தப்படுகிறது: "கலந்து கொள்ளுதல் … கூறப்படுவது அல்லது கூறப்பட்டது என்ன என்பதை ஆழ்ந்து சிந்தித்தல் … கூறப்பட்டதன் கருத்தை புரிந்து கொள்ளுதல், உய்த்துணருதல் … கற்றுக் கொள்ளுதல் … அப்போஸ்தல போதனையிலிருந்து கிறிஸ்துவை நன்கு அறிதல், எபேசியர் 4:21 … ஒருவருக்குச் செவி கொடுத்தல், கவனித்தல், உற்றுக் கேட்டல் … இணங்குதல், கேட்டு கீழ்ப்படிதல்"* (Thayer, 23). *சத்தியத்தைக் கேட்டறியும் போது இவ்விதமாய் உற்றுக் கேட்டு சத்தியத்திற்குக் கீழ்ப்படிகிறவர் இரட்சிக்கப்படுவார் (மத். 7:21-27; யாக். 1:21-25ஐக் காணவும்).*